**த. நா.ச.பே. எண் : 009** **நாள் : 15.09.2015**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 15.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியப் பங்கு வகிப்பதும், வளமான குடும்பம் மற்றும் சிறப்பான சமூக உறவுகள் அமைவதற்கு அடித்தளமாக விளங்குவதுமான உறைவிடத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது அரசின் தலையாய கடமை என்பதால், எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை மக்களுக்கு அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் பின் வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சென்னையில் குறைந்த வருவாய் பிரிவு மக்கள் வாங்கக் கூடிய விலையிலான வீட்டு வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், சென்னை அம்பத்தூரில் அனைத்து வசதிகளுடன், இரு படுக்கை அறைகளுடன் கூடிய 2,300 குடியிருப்புகள் தோராயமாக 380 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும். ஒரு குடியிருப்பின் விலை 20 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக நிர்ணயம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அரசு அலுவலர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு அலுவலர்களுக்கு சென்னை பாடிகுப்பம் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் 500 பன்னடுக்கு, மாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும். ஒவ்வொரு குடியிருப்பும் கழிப்பறைகளுடன் கூடிய இரண்டு படுக்கை அறைகள், ஒரு சமையலறை மற்றும் ஒரு உட்காரும் மற்றும் உணவு அருந்தும் கூடம் உடையதாக கட்டப்படும். ஒரு குடியிருப்பின் பரப்பளவு ஏறக்குறைய 700 சதுர அடியாக இருக்கும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 225 கோடி ரூபாயாகும். இக்குடியிருப்புகளுக்கான கட்டுமானம் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அனைத்துத் தரப்பு மக்களின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, சென்னை, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில், 674 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் பெருவாரியாக குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவு மக்களுக்காக 2,800 குடியிருப்பு அலகுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. என்னால் அறிவிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023–ன் குடிசை பகுதிகள் அற்ற நகர திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடப்பு நிதியாண்டில் மாநில அரசின் நிதி உதவியுடன் மைய அரசின் 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின் கீழ், வழங்கப்படும் மானியத்தோடும் 12,500 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 457 கோடியே 50 லட்சம் ரூபாயாகும்.

5. மாநில முழுமையிலும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1.55 லட்சம் குடியிருப்புகளை கட்டியுள்ளது. இவற்றில் பல மிகவும் பழமையானவை. இயற்கை சீற்றங்களாலும், கால மாற்றங்களாலும் இவை பழுதுபட்டுள்ளன. இக்குடியிருப்புகளில் பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு தமிழக அரசு, 10 கோடி ரூபாயை நிதி உதவியாக அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மதுரை நகருக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்.7க்கு அருகே தோப்பூர்– உச்சப்பட்டி பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஓர் துணை நகரம் அமைக்கப்படும் என அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அத்துணை நகரம் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தில் மேம்படுத்தப்படும் பகுதிகளில் 10 சதவீதத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 4,500 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான அலகுகளாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கும். இவ்வாறு நன்கு மேம்படுத்தப்பட்ட அலகுகளை, தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம், ‘‘அனைவருக்கும் வீட்டு வசதி’’ திட்டத்தின் கீழ், நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மதுரை நகரத்தின் ஆட்சேபகரமான புறம்போக்குகளில் வசிக்கும் குடிசைப் பகுதியினருக்கு ஒதுக்கீடு செய்யும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் மைய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு மானியத்தை பயன்படுத்தி பயனாளிகள் தாமே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் உதவி செய்யும். இதன் மூலம், மதுரை நகரத்தை குடிசைப் பகுதிகள் அற்ற நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மூன்று புறநகர் ரயில் பாதைகள், ஒரு பெருந்திரள் துரித ரயில் பாதை, தொலைதூர ரயில் பாதை மற்றும் தற்போது கட்டுமானத்தில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் கழகத்தின் பாதைகள் ஆகியவைகள் கூடும் இடமாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் திகழ்வதால், அப்பகுதி வர்த்தக செயல்பாட்டு மையமாகவும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து செல்லும் மைய இடமாகவும் உள்ளது. பெருவாரியான பயணிகள் இவ்விடத்தில் போக்குவரத்து முறையினை மாற்றுகின்றனர். அரசு பொது மருத்துவமனை, தென்னக ரயில்வே தலைமை அலுவலகம், சென்னை மாநகராட்சி மற்றும் சௌகார்பேட்டை பகுதி ஆகியவை இந்தப் பகுதியில் அமைந்திருப்பதால், போக்குவரத்து நெருக்கடி மேலும் அதிகரிக்கின்றது. எனவே, தங்கு தடையற்ற போக்குவரத்து மாற்றத்தை அளிக்கத் தக்கவாறு பயணிகளுக்கான வசதிகள், கீழ் தள வாகன நிறுத்தும் வசதி, பாதசாரிகளுக்கான முறையான நடைபாதை மற்றும் தரை தள வாகன நிறுத்தும் வசதி முதலானவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த பலதரப்பட்ட போக்குவரத்து முறையினை மேம்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதி அளிக்கும். சென்னை மெட்ரோ ரயில் கழகம் மூலம் தோராயமாக 400 கோடி ரூபாய் செலவில், ரிப்பன் மாளிகை, விக்டோரியா பொதுமக்கள் கூடம், மத்திய புறநகர் ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்; சென்னை ரயில்வே தலைமை அலுவலகக் கட்டிடம், சென்னை மருத்துவக் கல்லூரி, அரசு பொது மருத்துவமனை, பூங்கா நகர், சென்னை பெருந்திரள் திட்ட ரயில் நிலையம், பூங்கா ரயில் நிலையம் மற்றும் ராமசாமி முதலியார் சத்திரம் ஆகியவைகளுக்கு அருகே உள்ள பகுதிகள் உலகத் தரத்தில் ‘‘மத்திய

சதுக்கமாக'' மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. துரித நகர வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்தினால் தனி நபர் உபயோகப்படுத்தும் மின்சக்தி நுகர்வு அதிகமாகி வருகிறது. எனவே, இதனைக் கருத்திற் கொண்டு, மின்சக்தி பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் தேவைகளில் எவ்வித சமரசமும் இல்லாமல் சுற்றுச்சூழல் மாசு, ஏற்படுத்தாத மின்சக்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, அனைத்து தொகுப்பு வளர்ச்சிகள் மற்றும் பல மாடிக் கட்டடங்களில் சூரிய மின் சக்தியினைப் பெறுவதற்கான அமைப்பினை ஏற்படுத்துவது சட்டப்படி அவசியமாக்க வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய திருத்தங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

9. எண்ணூர் துறைமுகத்தில் நுழைகிற மற்றும் வெளியேறுகிற சரக்குந்து வாகனங்களினால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் வகையில், எர்ணாவூர் கிராமத்தில் எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 29 ஏக்கர் நிலப் பரப்பில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கூட்டு முயற்சியில் தோராயமாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சரக்குந்து வாகனம் நிறுத்தும் இடம் (Container Truck Parking Yard) கட்டப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் 900 சரக்குந்து வாகனங்களை Trucks-களை நிறுத்த வழிவகை ஏற்படும்.

மேற்காணும் அறிவிப்புகள், குறைந்த விலையில் தரமான வீடுகளை தமிழக மக்கள் வாங்கவும், நகர்ப்புற வளர்ச்சியினை மேம்படுத்தவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, தமிழகம் வீறுபெற்று உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டுமாயின், தொழிற் திறன் அவசியம் என்பதால், அதனை நிறைவேற்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு எடுத்து இருக்கிறது.

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழிற் திறன் பெற்ற, மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற் பயிற்சி நிலையங்கள் Industrial Training Institutes அரசால் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 77 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 45 பொறியியல் மற்றும் 20 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் 28,259 மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,000 மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறும் வகையில் விடுதி வசதியுடன் கூடிய 15 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்கிட நான் உத்தரவிட்டேன். அதன்படி 15 தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியான இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பால் அதாவது ASSOCHAM-ஆல் தொழில் வளர்ச்சி குறித்து மேற்கொள்ளப்பட்ட மாநிலங்களுக்கு

இடையேயான ஒப்பு நோக்கு ஆய்வின்படி, தமிழ்நாடு முதல் இடத்தினைப் பெற்று, வளர்ச்சிப் பாதையில் உள்ளது. தொழிற்துறை உற்பத்தியிலும் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்குவதிலும் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இதனால் திறன் பயிற்சி பெற்றவர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை, கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை, விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் ஆகிய ஐந்து இடங்களில் 1,000 மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறும் வகையில் விடுதியுடன் கூடிய புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 45 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படுவது மட்டுமல்லாமல் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****